# அரையாண்டுப் பொதுத் தேர்வு, டிசம்பர் - 2019

**வகுப்பு 11** பதிவெண்

நேரம்: 3.00 மணி **PART - III - வணிகவியல்** மொத்த மதிப்பெண்கள்: 90

**அறிவுரைகள்:** 1. அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும். 2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

www.kalviexpress.in

## பகுதி - I

**20×1=20**

குறிப்பு: **i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**
**ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

1) பாண்டியர் ஆட்சி காலத்தில் பொருட்கள் விற்பனை செய்யும் இடத்திற்கு .............. என்று பெயர்.
அ) அங்காடி ஆ) சந்தை இ) நாளங்காடி ஈ) அல்லங்காடி

2) பெயர்ச்சியியலின் முக்கிய நன்மை
அ) உற்பத்தி மேம்பாடு ஆ) செலவுகளை குறைத்தல்
இ) இலாபம் ஈட்டுதல் ஈ) பண்டகக் காப்பு

3) தொழிலின் முதன்மைக் குறிக்கோள் ..............
அ) இலாபம் ஈட்டுதல் ஆ) இலாபம் ஈட்டாமல் இருத்தல்
இ) சிறப்புத் தேர்ச்சி ஈ) வேலைவாய்ப்பு

4) அதிக அளவு அபாயத்தைக் கொண்டது
அ) உற்பத்தி தொழில் ஆ) வணிகம் இ) வியாபாரம் ஈ) இவை அனைத்தும்

5) கடன் பத்திரதாரர்கள் ஒரு நிலையான .............. விகிதம் பெறத் தகுதியுடையவர்கள்.
அ) பங்காதாயம் ஆ) இலாபம் இ) வட்டி ஈ) நட்டம்

6) .............. என்பது நிறுமங்கள் அயல்நாட்டு செலாவணியைப் பெறுவதற்காகவே வெளியிடப்படும் ஒரு சிறப்பு வகை பத்திரமாகும்.
அ) அரசு பத்திரங்கள் ஆ) அந்நியச் செலாவணி மாற்று பத்திரம்
இ) பெரு நிறுவன பத்திரங்கள் ஈ) உலகளாவிய வைப்பு இரசீது

7) சுய உதவிக் குழுக்களுக்குக் கடன் அளிக்க .............. வேறுபட்ட முறைகள் உள்ளன.
அ) 4 ஆ) 5 இ) 3 ஈ) 13

8) கீழ்க்கண்டவற்றில் எது பழமையான வியாபார அமைப்பு வடிவம்?
அ) தனியாள் வணிகம் ஆ) கூட்டாண்மை இ) கூட்டுறவு சங்கம் ஈ) நிறுமம்

9) இந்துக்கூட்டுக் குடும்ப வியாபாரத்தில் ஒருவர் எவ்வாறு உறுப்பினராகிறார்?
அ) உடன்படிக்கையால் ஆ) பிறப்பால்
இ) முதலீட்டின் அடிப்படையில் ஈ) நிர்வாகத்தின் அடிப்படையில்

10) ஒரு நாட்டின் அரசராலோ, அரசியாலோ வழங்கப்பட்ட சாசனத்தின் விளைவாக உருவாக்கப்படும் நிறுமங்கள் .............. எனப்படும்.
அ) பட்டய (அ) சாசன நிறுமங்கள் ஆ) சட்டமுறை நிறுமங்கள்
இ) பதிவு செய்யப்பட்ட நிறுமங்கள் ஈ) அயல்நாட்டு நிறுமங்கள்

11) கீழ்க்கண்ட அமைப்புகளில் எந்த அமைப்பிற்கு அரசு வரிச் சலுகைகளை வழங்குகிறது?
அ) கூட்டாண்மை ஆ) கூட்டுறவு சங்கம்
இ) கூட்டுப்பங்கு நிறுமம் ஈ) பன்னாட்டு நிறுமம்

12) .............. தீர்வக மையங்களை இந்திய ரிசர்வ் வங்கி தன்னகத்தே கொண்டுள்ளது.
அ) 14 ஆ) 840 இ) 6 ஈ) 60

13) வழங்கல் ஆணையுடன் .............. இணைக்கப்படுதல் வேண்டும்.
அ) பண்டக சான்றாணை ஆ) துறைமுக சான்றாணை
இ) துறைமுக இரசீது ஈ) பண்டகக் காப்பாளர் ரசீது

14) RTGS மூலம் குறைந்தபட்சம் எவ்வளவு பணம் பரிமாற்றம் செய்ய முடியும்?
அ) எவ்வளவு தொகை வேண்டுமானாலும் ஆ) 50,000 இ) 2 லட்சம் ஈ) 5 லட்சம்

15) முத்ரா வங்கி .............. வங்கிக்கு உதாரணம்.
அ) வெளிநாடு ஆ) வளர்ச்சி இ) கூட்டுறவு ஈ) வணிக

16) பின்வருவனவற்றில் எது ஊழியர்களின் சமூக பொறுப்புணர்வு ஆகாது?
அ) நியாயமான ஊதியம் ஆ) சரியான வசதிகள் இ) சமூகப் பாதுகாப்பு ஈ) சுரண்டல்

17) பொருந்தாத விடையைத் தேர்ந்தெடுக்கவும்.
அ) தெருக்கடை வியாபாரங்கள் ஆ) பொதுப்பண்டக சாலைகள்
இ) ஒரே வகை பண்டக சாலைகள் ஈ) சிறப்பங்காடிகள்

www.kalviexpress.in

18) உலக வர்த்தக அமைப்பு உருவாக்கப்பட்ட நாள்
அ) 1.1.1996 ஆ) 1.1.1997 இ) 1.1.1995 ஈ) 1.1.1994

19) சட்டத்தால் நடைமுறைப்படுத்தப்படும் ஓர் உடன்படிக்கை
அ) நிறைவேற்றக்கூடிய ஏற்பு ஆ) ஏற்றுக்கொள்ளப்பட்ட முனைவு
இ) ஒப்புக்கொண்ட வாக்குறுதி ஈ) ஒப்பந்தம்

20) சரக்கு மற்றும் சேவை வரிவிதிப்பு முறை நடைமுறைப்படுத்தப்பட்ட நாள்
அ) ஏப்ரல் 1, 2017 ஆ) சனவரி 1, 2017 இ) சூலை 1, 2017 ஈ) மார்ச் 1, 2017

## பகுதி - II

**குறிப்பு: எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். 7×2=14**
**வினா எண் 30-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

21) இந்துச் சட்டத்தின் இரண்டு பிரிவுகள் யாவை?
22) வரையறு பொறுப்பு என்றால் என்ன?
23) வெளிநாட்டு வங்கிகள் என்றால் என்ன?
24) தனி உரிமம் பெற்றவர் என்பவர் யார்? www.kalviexpress.in
25) குறியீடு என்பதன் பொருள் என்ன?
26) நாணய உறுதிக் கடிதம் என்றால் என்ன?
27) தெற்காசிய நாடுகளின் பிராந்திய ஒத்துழைப்பிற்கான கூட்டமைப்பு குறிப்பு வரைக.
28) ஒப்பந்தம் பொருள் தருக.
29) வருமான வரியின் நான்கு சிறப்புக் கூறுகளை கூறுக.
30) திரு. ராமு என்பவர் 31.3.2018 அன்று அவரது வருமான வரி படிவத்தைத் தாக்கல் செய்ய விரும்புகிறார். அவரது மதிப்பீட்டு ஆண்டு மற்றும் முந்தைய ஆண்டு எது?

## பகுதி - III

**குறிப்பு: எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். 7×3=21**
**வினா எண் 40-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

31) பண்டமாற்று முறை என்றால் என்ன? பண்டமாற்று முறைக்கான இரண்டு நிபந்தனைகள் எழுதுக.
32) கூட்டுறவுகளின் குறைபாடுகள் எவையேனும் மூன்றினை விவரிக்கவும்.
33) உண்மை நேர மொத்தத் தீர்வக அமைப்பு பற்றி ஒரு குறுகிய குறிப்பு எழுதுக.
34) பன்னாட்டு நிறுமங்களின் இயல்புகளில் ஏதேனும் ஆறினை எழுதுக.
35) தொழில் நிதியியல் - வரைவிலக்கணம் தருக.
36) உற்பத்தியாளர்களுக்கு மொத்த வியாபாரிகள் ஆற்றிடும் சேவைகள் ஏதேனும் மூன்று விவரிக்கவும்.
37) சிறப்பங்காடியின் சிறப்பியல்புகளில் ஏதேனும் மூன்றினை விளக்குக.
38) ஏற்றுமதி வியாபாரம் என்றால் என்ன?
39) மூலதனக் கணக்கின் உள்ளடக்கங்கள் யாவை?
40) ஒரு நாட்டின் எல்லையைத்தாண்டி மக்களும் நிறுவனங்களும் வியாபார நடவடிக்கையை மேற்கொண்டால் அவ்வியாபாரத்தின் பெயர் என்ன? அவ்வியாபாரத்திற்கு பயன்படுத்தப்படும் போக்குவரத்துக்களை எழுதுக.

## பகுதி - IV

**குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 7×5=35**

41) அ) உற்பத்தி தொழில், வணிகம் மற்றும் வியாபாரம் ஓர் ஒப்பீடு செய்க. **(அல்லது)**
ஆ) சரக்கு மற்றும் சேவை வரியின் வகைகளை விளக்குக.

42) அ) கூட்டாண்மை நிறுவனத்தை பதிவு செய்ய பின்பற்றப்படும் நடைமுறைகளை விவரிக்கவும். **(அல்லது)**
ஆ) அந்நியச் செலாவணி மாற்றுப் பத்திரத்தின் ஏதேனும் 5 சிறப்புக் கூறுகளை விவரிக்கவும்.

43) அ) உள்நாட்டு வியாபாரத்தின் இயல்புகள் ஏதேனும் பத்தினைக் கூறுக. **(அல்லது)**
ஆ) செயல்முறை விதிகளில் அடங்கியுள்ள பொருளடக்கங்கள் ஏதேனும் பத்தினைக் கூறுக.

44) அ) துறைவாரி நிறுமத்தின் சிறப்பியல்புகள் யாவை? **(அல்லது)**
ஆ) மின்னணு வணிகத்தினால் வாங்குபவர்களுக்கு ஏற்படும் நன்மைகள் ஏதேனும் 5 எழுதுக.

45) அ) இந்திய ரிசர்வ் வங்கியின் கட்டமைப்பு - விளக்குக. **(அல்லது)**
ஆ) சமூகப் பொறுப்புணர்வின் வகைகள் விளக்குக.

46) அ) ஏதேனும் ஐந்து தனிநபர் முதலீட்டு வழிகளை விளக்குக. **(அல்லது)**
ஆ) தொடர் வண்டி போக்குவரத்தின் நன்மைகளை எழுதுக.

47) அ) பண்டக சான்றாணை மற்றும் பண்டக காப்பாளர் இரசீதுக்கும் உள்ள வேறுபாடு எழுதுக. **(அல்லது)**
ஆ) பன்னாட்டு நாணய நிதியத்தின் பணிகள் விளக்குக.

********

www.kalviexpress.in